**ஜனவரி – 11**

# TNPSC துளிகள்

- 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் 'மிலன்' என்ற ஒரு சர்வதேசக் கடற்படைப் பயிற்சியை விசாகப்பட்டினம் நடத்த இருக்கின்றது.
    - இந்தப் பயிற்சியின் கருப்பொருள் "கடல் முழுவதும் கூட்டு விளைவு" (Synergy Across the Seas) என்பதாகும்.
- 2021 - 22 ஆம் ஆண்டிற்குள் மண்டல ரயில்வேயிற்கு 1000 மெகாவாட் திறனுள்ள சூரியஒளி மின்சக்தியையும் 200 மெகாவாட் திறனுள்ள காற்றாலை மின்சக்தியையும் வழங்க இருப்பதாக இந்திய ரயில்வே அறிவித்துள்ளது.
- நாட்டின் சுகாதாரத் துறையை வலுப்படுத்துவதற்காக மத்திய சுகாதாரத் துறை அமைச்சகம் மற்றும் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை ஆகியவை இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
    - இது குழந்தை இறப்பு, குழந்தையின் நோயுற்ற தன்மை, தாய்மார்களின் இறப்பு மற்றும் பச்சிளங் குழந்தைகளின் இறப்பு ஆகியவற்றைக் குறைப்பதில் கவனம் செலுத்துகின்றது.
- இந்திய ரயில்வே நிறுவனத்தை எரிசக்தியில் தன்னிறைவு அடையச் செய்வதற்காக மத்திய ரயில்வே அமைச்சகமும் இங்கிலாந்து அரசும் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளன.
    - மேலும் மின்சார வாகன மின்னேற்று உள்கட்டமைப்பை ஏற்படுத்தவும் இங்கிலாந்து அரசு உதவ இருக்கின்றது.

# தேசியச் செய்திகள்

## சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் மீதான கட்டுப்பாடு

- சிறுபான்மையின கல்வி நிறுவனங்கள் "கல்வியில் சிறந்து விளங்குவதற்கு" நல்ல தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமிப்பதற்காக "தேசிய நலன்" கருதி ஒரு ஒழுங்குமுறையை அறிமுகப்படுத்த மாநில அரசிற்கு உரிமை உண்டு என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.
- 2008 ஆம் ஆண்டின் மேற்கு வங்க மதரஸா பணி ஆணையச் சட்டம் செல்லுபடியாகும் என்ற தீர்ப்பை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கில் இந்த தீர்ப்பு வெளி வந்துள்ளது.
- அரசு உதவி பெறும் மதரஸாக்களில் ஆசிரியர்களை நியமிக்கும் செயல்முறையானது ஒரு ஆணையத்தால் மேற்கொள்ளப்படும் என்று இந்த சட்டம் கட்டாயப் படுத்துகின்றது. இந்த ஆணையத்தின் முடிவு அனைவரையும் கட்டுப்படுத்தும்.
- சிறுபான்மை நிறுவனங்கள், தங்கள் விருப்பப்படி கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும் நிர்வகிப்பதற்கும் அரசியலமைப்பின் 30வது பிரிவின் கீழ் ஒரு அடிப்படை உரிமையைப் பெற்றுள்ளன.
- இருப்பினும், மாநில அரசினால் பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளை அந்த நிறுவனங்களால் புறக்கணிக்க முடியாது.
- எவ்வாறாயினும், இந்த ஒழுங்குமுறைச் சட்டமானது சிறப்பான தரத்தை உறுதி செய்வதோடு சிறுபான்மையினரின் கல்வி நிறுவனங்களை நிறுவுவதற்கும் நிர்வகிப்பதற்கும் உள்ள அடிப்படை உரிமையைப் பாதுகாத்தல் என்ற இரட்டை நோக்கங்களைச் சமநிலைப்படுத்த வேண்டும்.

- இதற்காக, உச்ச நீதிமன்றம் கல்வியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்துள்ளது:
  - மதச்சார்பற்ற கல்வி
  - கல்வி என்பது "மத அல்லது மொழியியல் சிறுபான்மையினரைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டது அல்லது அதனைக் கையாள்வது" என்பதாகும்.

## ஜம்மு காஷ்மீரை இந்தியாவின் பிற பகுதிகளுடன் இணைப்பதற்கான இந்திய ரயில்வேயின் திட்டம்

- 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 21ற்குள் ரயில்வே அமைப்பின் மூலம் காஷ்மீர் ஒன்றியப் பிரதேசத்தை இந்தியாவின் மற்ற பகுதிகளுடன் இணைக்கப்பட இருப்பதாக இந்திய ரயில்வே துறை அமைச்சகம் அறிவித்துள்ளது.
- இந்த திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனம் கொங்கன் ரயில்வே ஆகும்.
- இந்திய ரயில்வேயின் கூற்றுப் படி, 150 ஆண்டுகால வரலாற்றில் மிகவும் சவாலான ஒரு உள்கட்டமைப்பு திட்டம் இதுவாகும்.
- இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக செனாப் ஆற்றின் குறுக்கே கட்டப்பட இருக்கும் ஒரு பாலமானது உலகின் மிக உயரமான பாலமாக இருக்கும்.

## வடகிழக்கு எரிவாயு குழாய்த் தொடர்

- பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவானது வடகிழக்கு எரிவாயு குழாய்த் தொடர் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்தக் குழாய்த் தொடரானது சுமார் 1,656 கி.மீ தூரத்திற்கு அமைக்கப்பட உள்ளது.
- வடகிழக்குப் பிராந்தியத்தில் உள்ள மணிப்பூர், மேகாலயா, அசாம், அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், சிக்கிம், நாகாலாந்து மற்றும் திரிபுரா ஆகிய எட்டு மாநிலங்களில் இந்த எரிவாயு குழாய்த் தொடர் உருவாக்கப்பட உள்ளது.
- இந்தத் திட்டம் பின்வரும் 5 பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டு முயற்சியாகும்
  - ஓஎன்ஜிசி (எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயுக் கழகம்),
  - ஐஓசிஎல் (இந்தியன் எண்ணெய்க் கழகம்),
  - OIL (இந்திய எண்ணெய் நிறுவனம்),
  - கெயில் (இந்திய எரிவாயு ஆணையம்) மற்றும்
  - என்ஆர்எல் (நுமாலிகார்ஹ் எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம்).
- இந்தக் கூட்டு முயற்சிக்கு ஐஜிஜிஎல் (இந்திர தனுஷ் எரிவாயுத் தொடர்) என்று பெயரிடப் பட்டுள்ளது.
- இந்த எரிவாயுத் தொடர் திட்டத்திற்கு 5,559 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- இந்த திட்டமானது மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயுத் துறை அமைச்சகத்தினால் கண்காணிக்கப்பட இருக்கின்றது.
- இந்தத் திட்டமானது இந்திய அரசின் இலட்சியத் திட்டமான உர்ஜா கங்கா எரிவாயு குழாய் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப் படுகின்றது.

## பருப்பு வகைகள் குறித்த 5வது மாநாடு - 2020

- ❖ பருப்பு வகைகள் குறித்த 5வது மாநாடு – 2020 ஆனது மகாராஷ்டிராவின் லோனாவாலாவில் நடைபெற இருக்கின்றது.
- ❖ இது இரண்டு ஆண்டிற்கு ஒரு முறை நடத்தப்படும் ஒரு மாநாடாகும்.
- ❖ இந்திய பருப்பு வகைகள் மற்றும் தானியச் சங்கமானது இந்த மாநாட்டை நடத்த இருக்கின்றது.
- ❖ மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், உத்தரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகியவை இந்தியாவில் பருப்பு வகைகளை உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ள மாநிலங்களாகும்.
- ❖ உலக அளவில் மிகப்பெரிய பருப்பு உற்பத்தியாளர், மிகப்பெரிய பருப்பு நுகர்வோர் மற்றும் உலகில் பருப்பு வகைகளை மிக அதிக அளவில் இறக்குமதி செய்யும் நாடாக இந்தியா விளங்குகின்றது.
- ❖ பருப்பு வகைகள் மண்ணின் வளத்தை அதிகரிக்கின்றன. எனவே இவை வருடாந்திரப் பருப்பு வகைப் பயிர்களாகப் பயன்படுத்தப் படுகின்றன.

# சர்வதேசச் செய்திகள்

## இந்தியா - மங்கோலியா விண்வெளி ஒத்துழைப்பு ஒப்பந்தம்

- ❖ அமைதியான மற்றும் பொதுமக்கள் பயன்பாடு (சிவில்) ஆகிய நோக்கங்களுக்காக விண்வெளியை ஆராய்வது மற்றும் பயன்படுத்துவது குறித்த இந்தியாவிற்கும் மங்கோலியாவிற்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர்பான ஒரு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- ❖ இந்த ஒப்பந்தமானது கிரகங்கள் குறித்த ஆய்வு, விண்வெளி அமைப்பு மற்றும் விண்வெளி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் இந்த இரு நாடுகள் இணைந்து பணியாற்ற அனுமதிக்கின்றது.
- ❖ இஸ்ரோ (இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம்), விண்வெளித் துறை, மங்கோலியாவின் தகவல் தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப ஆணையம் ஆகியவற்றிலிருந்து சில உறுப்பினர்களை அழைத்து ஒரு கூட்டுச் செயற்குழுவை ஏற்படுத்த இதில் திட்டமிடப்பட்டுள்ளது.

## கடல் பாதுகாவலர்கள் 2020 – கடற்படைப் பயிற்சி

- ❖ சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இணைந்து வடக்கு அரேபியக் கடல் பகுதியில் ஒன்பது நாட்கள் நடைபெறும் ஒரு கடற்படைப் பயிற்சியை நடத்தி வருகின்றன.
- ❖ இந்தக் கடற்படைப் பயிற்சிக்கு "கடல் பாதுகாவலர்கள்" (Sea Guardians) என்று பெயரிடப் பட்டுள்ளது.

- இது சீனாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான அனைத்து வித வானிலை சூழ்நிலைகளையும் எதிர்கொள்ளும் வகையில் உத்திசார் கூட்டாண்மைகளை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.



# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவில் மின் வணிகம் குறித்த சந்தை ஆய்வு

- இந்தியப் போட்டி ஆணையமானது (Competition Commission of India - CCI) 'இந்தியாவில் மின் வணிகம் குறித்த சந்தை ஆய்வு: முக்கிய கண்டுபிடிப்புகள் மற்றும் குறிப்புகள்' என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி, இணையப் பயனர்களின் எண்ணிக்கையானது 2017 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரை அதிகரித்துள்ளது.
- நாட்டில் மின் வணிகத் துறையின் விரைவான வளர்ச்சிக்கு இதுவே முதன்மைக் காரணமாகும்.
- மின் வணிகத் துறையின் வருவாயானது 51% என்ற விகிதத்தில் வளர்ந்து வருகின்றது.
- உணவுத் துறையில் விநியோக சந்தைப் பகுதிகள் 90% என்ற அளவில் உயர்த்தப் பட்டுள்ளன.
- இந்தியாவில் மின் வணிகத் துறையானது 2009 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தியாவில் சுமார் 4757 மின் வணிகத் துறை ஸ்டார்ட் அப் நிறுவனங்கள் (புதிதாக தொழில் தொடங்கிய நிறுவனங்கள்) உள்ளன.


# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## LIGO - இரண்டாவது ஈர்ப்பு அலை கண்டறிதல்

- இரண்டு நியூட்ரான் நட்சத்திரங்களின் மோதல் காரணமாக புவி ஈர்ப்பு அலைகளை LIGO (லேசர் ஒளியலை அளவுமானி புவி ஈர்ப்பு அலை ஆய்வகம் - Laser Inferometer Gravitational-wave Observatory) கண்டறிந்துள்ளது.
- புவி ஈர்ப்பு அலைகள் கண்டறியப்படுவது இது இரண்டாவது முறையாகும்.
- நியூட்ரான் நட்சத்திரங்கள் ஒரு சூப்பர்நோவா எனப்படும் உமிழும் வெடிப்பின் போது மறைந்து போன மாபெரும் நட்சத்திரங்களின் மீதங்களாகும்.
- இவை சூரியனை விட 1.4 மடங்கு அதிக நிறை கொண்டவையாகும்.
- நியூட்ரான் நட்சத்திரங்கள் பூமியிலிருந்து 520 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் இருக்கின்றன.

*LIGO*

- இது அண்ட ஈர்ப்பு அலைகளைக் கண்டறிவதற்கும் சோதனைகளை மேற்கொள்வதற்கும் ஒரு மிகப்பெரிய ஆய்வகமாகச் செயல்படுகின்றது.
- தற்போது LIGO ஆனது அமெரிக்காவின் லிவிங்ஸ்டன், லூசியானா மற்றும் ஹான்போர்டில் மூன்று ஈர்ப்பு அலை கண்டுபிடிப்பு ஆய்வகங்களை இயக்குகின்றது.
- LIGO இந்தியா ஆய்வகமானது ஆனது மகாராஷ்டிராவில் அமைய இருக்கின்றது.
- LIGO - இந்தியா என்ற திட்டத்தை இந்திய அணுசக்தித் துறை, இந்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை ஆகியவை இணைந்து செயல்படுத்துகின்றன.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## இந்திய பொம்பனோ மீன் வளர்ப்பு

- இந்தியாவில் முதன்முறையாக, மத்தியக் கடல் மீன் வள ஆராய்ச்சி நிறுவனமானது (Central Marine Fisheries Research Institute - CMFRI) இந்திய பொம்பனோ மீன்களை குளங்களில் வளர்க்க ஒரு சாத்தியமான அறிவியல் முறையை உருவாக்கியுள்ளது.
- பொம்பனோ மீன்கள் கடல் மீன் வகை இனத்தைச் சேர்ந்தவையாகும்.
- இந்திய அரசு பொம்பனோ மீன் குறித்த அறிவியல் ஆய்வை 2014 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- இந்தத் திட்டத்திற்கு நிதியுதவியானது தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தினால் (National Fisheries Development Board - NFDB) வழங்கப் பட்டுள்ளது.
- இறால்களுடன் பொம்பனோவை வளர்ப்பது இறால்களின் உயிர்வாழ்வு விகிதத்தை அதிகரிக்கும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இறால்களைத் தாக்கும் வைரஸ்களின் வாழ்க்கைச் சுழற்சியை பொம்பனோ மீன்கள் உடைக்கின்றன.
- இறால் மற்றும் பொம்பனோ ஆகியவற்றின் ஊடு வளர்ப்பைச் செயல்படுத்த மத்திய அரசாங்கம் தற்போது திட்டமிட்டுள்ளது.


Adult Pompano


Pompano Fingerlings (1.5 inch size)

# முக்கிய தினங்கள்

## வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினம் – 2020, ஜனவரி 9

- பிரவசி பாரதிய திவாஸ் ஆனது வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினம் என்று அழைக்கப் படுகின்றது.
- 1915 ஆம் ஆண்டில் மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியா திரும்பியதன் நினைவாக இத்தினமானது கொண்டாடப்படுகின்றது.
- 2019 ஆம் ஆண்டில், இந்த நிகழ்வானது வாரணாசியில் கொண்டாடப் பட்டது.
- வெளிநாடு வாழ் இந்தியர்களை அங்கீகரிப்பதற்காக 2003 ஆம் ஆண்டு முதல் இத்தினம் கொண்டாடப் படுகின்றது.
- இந்நிகழ்ச்சியானது மத்திய வெளியுறவுத் துறை அமைச்சகத்தினால் ஏற்பாடு செய்யப் படுகின்றது.
- இந்த நிகழ்ச்சிக்கு இந்திய தொழில்துறைக் கூட்டமைப்பினால் நிதியுதவி அளிக்கப் படுகின்றது.
- மிகச் சிறந்து விளங்கும் வெளிநாடு வாழ் இந்தியர்களை கௌரவிப்பதற்காக பிரவசி பாரதிய சம்மன் விருதானது இந்தியக் குடியரசுத் தலைவரால் வழங்கப் படுகின்றது.

Pravasi Bharatiya Divas
Ministry of External Affairs
Government of India

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★